MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

## குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்



பிப்ரவரி 2022



### இந்த பதிப்பில்:


முக்கிய அறிவிப்புகள்

மோசடிகளுக்கு எதிராக உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

சந்திரமதி புத்தாண்டு கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

# முக்கிய அறிவிப்புகள்






## அட்டவணை முறைப்படி நடத்தப்படும் வழக்கமான பரிசோதனையை (RRT) அகற்றுதல்

கீழே உள்ள தகுதி நிர்ணயங்களில் ஏதேனும் ஒன்று உங்களுக்குப் பொருந்தினால், நீங்கள் RRTக்கு செல்ல வேண்டியதில்லை:

1. நீங்கள் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டு, ஒரு தங்கும் விடுதியில் வசிக்கிறீர்கள்*.
2. நீங்கள் தற்போது கட்டுமானம், கப்பல் பட்டறை மற்றும் ரசாயனப் பெட்ரோலியத் துறைகளில் வேலை செய்கிறீர்கள்.
3. நீங்கள் தங்கும் விடுதிகள், புதிய ஊழியர் சேர்ப்பு மையங்கள் மற்றும் பொழுதுபோக்கு நிலையங்களில் வேலை செய்யும் முன்கள ஊழியர்.

*பிரானி மற்றும் பாசிர் பாஞ்சாங் தங்கும் விடுதிகளில் வசிக்கும் குடிபெயர்ந்த ஊழியர்களைத் தவிர்த்து

## புதிய அடிப்படை சுகாதார பராமரிப்பு திட்டம் (PCP)




நீங்கள் தங்கும் விடுதிகளில் வசிக்கும் **அல்லது** கட்டுமானம், கப்பல் பட்டறை மற்றும் ரசாயனப் பெட்ரோலியத் துறைகளில் வேலை செய்யும் வேலை அனுமதி அல்லது எஸ் பாஸ் வைத்திருப்பவராக இருந்தால், உங்கள் வேலை அனுமதிச் சீட்டு 1 ஏப்ரல் 2022 முதல் 31 மார்ச் 2023க்கும் இடைப்பட்டக் காலத்தில் புதுப்பிக்கப்பட வேண்டியதில்லை என்றால், **31 மார்ச் 2023க்குள்** உங்களுக்கு ஒரு PCPஐ உங்கள் முதலாளி வாங்க வேண்டும்.

**புதிதாக வந்த ஊழியர்கள் அல்லது ஏற்கனவே பணிபுரியும் ஊழியர்கள், ஏப்ரல் 1 முதல் தங்கள் வேலை அனுமதிச் சீட்டைப் புதுப்பிக்கும் போது**, புதிய வேலை அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுவதற்கு முன் உங்கள் முதலாளி PCPஐ வாங்க வேண்டும். PCP நன்மைகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, PCP செய்தி வெளியீட்டைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்.


# மோசடிகளில் சிக்காதீர்கள்!








காவல்துறை அல்லது மனிதவள அமைச்சு போன்ற அரசாங்க நிறுவனங்கள் உங்களிடம் பணம் அல்லது உங்கள் கடவுச்சொற்களைக் **கேட்காது**





சிங்கப்பூர் வங்கிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து வரும் அழைப்புகளின் எண்ணுக்கு முன் “+65 என்ற எண்கள்” **இடம்பெறாது.**



முன்பின் தெரியாதவர்களுடன், உங்கள் வங்கி விவரங்கள், ஒரு முறை கடவுச்சொல் அல்லது பணத்தை **மாற்றி அனுப்ப வேண்டாம்.**




இது நம்ப முடியாத அளவிற்கு உண்மையாகத் தோன்றினால், அது ஒரு மோசடியாக இருக்கக்கூடும்.



ஆலோசனைக்குக் கீழே உள்ள தொலைபேசி எண்களை அழைக்கவும்:

1800 722 6688 (**மோசடி- எதிர்ப்பு உதவி எண்**)
திங்கள்-வெள்ளி, காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, பொது விடுமுறைகளைத் தவிர்த்து

1800 255 0000 (**போலீஸ் உதவி எண்**)

நீங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டீர்கள் என்று நினைத்தால், உங்கள் ஃபாஸ்ட் அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிட்டு மேலே கொடுக்கப்பட்டிருக்கும் எண்களை அழைக்கவும்

**உங்களுக்கு உதவ நாங்கள் இருக்கிறோம். மோசடி தொடர்பான உதவிக்குறிப்புகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, ஸ்கேம் அலர்ட் (ScamAlert) இணையத் தளத்தை நாடவும்.**

## எங்களது குடிபெயர்ந்த ஊழியரிடமிருந்து ஒரு செய்தி

பங்களாதேஷைச் சேர்ந்த குடிபெயர்ந்த ஊழியர் இஸ்லாம் ராக்கிபுல் என்பவரைச் சந்திக்கலாம். அவர் நம்முடன் இதனைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்:



நான் முஸ்தபா சென்டரில் இருந்தபோது, ஒரு நபர் என்னை அணுகி, தான் மனிதவள அமைச்சின் அதிகாரி என்று பாசாங்கு செய்து, எனக்கு $300 அபராதம் விதிக்கப்பட்டதாகக் கூறினார். அவ்விடத்திலேயே ஒருபோதும் மனிதவள அமைச்சு பணம் வசூலிக்காது என்பது எனக்குத் தெரியும். மேலும் அவரால் தனது அடையாள அட்டையை என்னிடம் காட்ட முடியவில்லை. நான் உடனடியாக போலீஸை அழைத்தபோது அந்நபர் ஓடிவிட்டார். என் நண்பர்களே, தயவுசெய்து பயப்பட வேண்டாம். உங்களுக்கு ஏதேனும் தப்பாக தோன்றினால், தயவுசெய்து போலிஸாரை அழைக்கவும்.

# நிகழ்வின் சிறப்பம்சங்கள் (சந்திரமதி புத்தாண்டு பதிப்பு)




## வெஸ்ட்லைட் கிராஞ்சி தங்கும் விடுதியில் கொண்டாட்டங்கள்!

சந்திரமதி புத்தாண்டை நமது குடிபெயர்ந்த ஊழியர்களுடன் கொண்டாட எங்களது கூட்டாளர்களுடன் இணைந்து பல்வேறு கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன!

பிப்ரவரி 6, 2022 அன்று, மனிதவள அமைச்சர் டாக்டர் டான் சீ லெங் மற்றும் துணை மூத்த அமைச்சர் டாக்டர் கோ போ கூன் ஆகியோர் வெஸ்ட்லைட் கிராஞ்சியில் வசிப்பவர்களுடன் பண்டிகை விடுமுறையைக் கொண்டாடினர். சீனக் கையெழுத்துக்கலை, அன்பளிப்பு பை விநியோகம் மற்றும் கலை, கைவினைப் பட்டறை ஆகியவை அன்று நடைபெற்ற நடவடிக்கைகளில் சில.

## சிங்கப்பூர் சீன கலாச்சார மையத்திற்கு உல்லாசப் பயணம்

பிப்ரவரி 13 அன்று, எங்களது அரசு சாரா பங்காளியான CMSC-யுடன் இணைந்து, மனிதவள அமைச்சு பல்வேறு தங்குவிடுதிகளைச் சேர்ந்த குடிபெயர்ந்த ஊழியர்கள் குழுவை, சிங்கப்பூர் சீன கலாச்சார மையத்திற்கு (SCCC) அழைத்து சென்றது. நமது வரலாறு, உணவு மற்றும் பண்டிகைகள் மூலம் சிங்கப்பூரின் பன்முக கலாச்சார அடையாளத்தைப் பற்றி அங்கு அவர்கள் மேலும் கற்றுக்கொண்டனர்.

இந்த உல்லாசப் பயணத்தை எங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்ததற்காக CMSC மற்றும் SCCC- க்கு மிக்க நன்றி!




## பொழுதுபோக்கு நிலையத்தில் கொண்டாட்டங்கள்

கிராஞ்சி பொழுதுபோக்கு நிலையத்திலும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. அவர்களுக்கு லன்டென் விளக்குப் பட்டறைகள், ஓவியப் போட்டிகள் மற்றும் பிற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பல்வேறு பொழுதுபோக்கு நிலையங்களில் மாண்டரின் ஆரஞ்சுகளும் விநியோகிக்கப்பட்டன.



நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு **நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப்** பற்றி மேலும் அறிய இங்கே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

அண்மைய செய்திகள் மற்றும் தகவல்களைப் பெற எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!

- மனிதவள அமைச்சின் ஃபேஸ்புக் பக்கம்
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் இணையத் தளம்